கிறிஸ்துமஸ்
மற்றும்
புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்



2007 2008

CHRISTMAS

NEW YEAR



# சுத்திகரிக்கும் அக்னி

## Sadhu Chellappa


42/28, First Cross Street, Dr. Radhakrishnan Nagar,
Chennai - 600 041. ✆ : 91- 044 - 24527519,
044-24521135 (10 a.m. to 5 p.m.)

# அன்புள்ள அக்னி வாசகர்களுக்கு

கிறிஸ்து இயேசுவுக்குள் அன்புள்ள அக்னி வாசகர்களுக்கு, அன்பின் வாழ்த்துக்கள். சுகமாக இருப்பீர்கள் என விசுவாசிக்கிறேன். டிசம்பர் வந்து விட்டது. கூட செலவுகளும் தொடர்கதைபோல வந்து விடும். அக்னி ஊழியங்கள் மூலம் ஆசீர்வதிக்கப்படும் ஏழை எளிய மக்களையும் நினைத்துக் கொள்ளுங்கள். கிராம சபையில் உள்ளவர்களுக்கு உடை, உணவு போன்றவைகளை வாங்க வேண்டும். இம்மாத ஆரம்பத்திலேயே உங்கள் காணிக்கைகள் வந்துவிட்டால், கடைசி நேரத்தில் அலைவது தவிர்க்கக் கூடும். உங்கள் ஜெபமும் தேவை.

உங்கள் கிரியையையும் நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே!

விசனமாகவும் அல்ல கட்டாயமாகவும் அல்ல, அவரவர்கள் தங்கள் தங்கள் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவீர்கள். உற்சாகமாய்க் கொடுக்கிறவர் களிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

அக்னியின் மூலமாக எரையூர் கிராமத்தில் ‘பிரைமரி’ பள்ளிக் கூடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அடுத்த கல்வி ஆண்டுக்குள் வகுப்பறைகள் கட்டப்பட வேண்டும். இதற்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறோம். வசதியுள்ளவர்கள் உதாரத்துவமாய் கொடுத்தால் தாராளமாகக் கட்டி முடிக்க இயலும். ஆலயத்தின் மொட்டை மாடியிலும் “கம்யூனிடி ஹால்” கட்டவேண்டியுள்ளது. இக்கிராம சபை நன்றாக வளர்ச்சி பெற்றுள்ளது. நேரமும் நாளும் இருக்கும் போது (விசுவாசிகள்) வருகை தந்தால் நாங்கள் மகிழ்வோம். நீங்களும் மகிழ்வீர்கள்.

அடையாரில் உள்ள சபையும் நன்கு வளர்ந்து வருகிறது. இதனுடைய தேவைகளும் சந்திக்கப்பட வேண்டும். அற்புதமாக அவ்வப்போது நேரிலும், மணியார்டர் மூலமாகவும், செக், டிராப்ட் மூலமாகவும் உரிய நேரத்தில் நீங்கள் தரும் காணிக்கைகள் பாலைவனத்தில் நீரோடையைக் கண்டு மனம் மகிழ்வது போல எங்களை மகிழ்விக்கிறது.

ஒன்றுமில்லாததிலிருந்து உருவாக்குகிற தேவன் இத்தனை ஆண்டுகளும் அற்புதமாக நடத்தி வந்திருக்கிறார். இனியும் நடத்துவார் என்ற விசுவாசம் இருக்கிறது. என்னை நடத்துகிறவர் உங்களையும் நடத்துவார். கிருபை இருக்கு மட்டும் ஊழியம் செய்ய தேவன் பெலன் தருவார்.

உங்கள் யாவருக்கும் கிறிஸ்துமஸ், மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

கர்த்தர் உங்களுடன் இருப்பாராக. அவர் உங்களை ஆசீர்வதிப்பாராக. உங்களைக் கண்ணின் மணி போலக் காத்துக் கொள்வாராக. சென்ற அக்னியில் எழுத்துப் பிழைகள் அதிகம் இருந்தது. மன்னித்துக் கொள்ளவும்.

## 2008ம் ஆண்டுக்கான வாக்குத்தத்தம்

**"நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ கண்ணீர் விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக் கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார். உன் கிரியைக்குப் பலனுண்டு என்று கர்த்தர் சொல்லுகிறார்." [எரேமியா 31:16]**

அழாதே, கண்ணீர் விடாதே, பலன் உண்டு.

அன்புடன் உங்கள் ஊழியன்

**சாது செல்லப்பா**

# உயிரடையுங்கள்

“உலர்ந்த எலும்புகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள், உங்களுக்குள் ஆவியைப் பிரவேசிக்கப் பண்ணுவேன், அப்பொழுது உயிரடைவீர்கள்.

மேற்கண்ட வசனம் எசேக்கியேல் 37 ம் அதிகாரத்தில் 4,5ம் வசனங்களின் கடைசி பாகங்களில் காணப்படுகின்றன.

“தோலையும் சதையையும் எனக்குத் தரித்து, எலும்புகளாலும் நரம்புகளாலும் என்னை இசைத்தீர். எனக்கு ஜீவனைத் தந்ததும் அல்லாமல், தயவையும் எனக்குப் பாராட்டினீர். உம்முடைய பராமரிப்பு என் ஆவியைக் காப்பாற்றினது.”

மேற்கண்ட வசனம் யோபு புத்தகத்தில் 10ம் அதிகாரம் 11,12 ஆகிய வசனங்களில் உள்ளன.

எலும்பும் தோலுமாய் இருக்கிறான்(ள்) என்று சொல்லுவதுண்டு. பிள்ளை எலும்பாய் போய் விட்டது என்று அங்கலாய்க்கும் தாய்மார்கள் உண்டு. “டேய் எலும்பா” என்று பகடி சொல்லுகிறவர்களும் உண்டு.

சரீரத்தில் உள்ள எலும்புகளையெல்லாம் எடுத்து விட்டால் மனித உருவம் எட்டு கிலோ மாமிசக் குவியலாகக் கிடக்கும். மனிதன் மரித்த பின்பு அடக்கம் செய்தாலும் எரித்தாலும் மிச்சமாகக் கிடைப்பது எலும்புகள் மட்டுமே; அதுவும் ஒரு மண்டை ஓட்டைக் கண்டால் பயமாகத்தான் இருக்கிறது.

பல ஆண்டுகள் கழித்து ஒரு சமாதிக் குழியை வெட்டி எடுத்துப் பார்த்தால் எலும்புகள் ஒவ்வொன்றும் தனித்தனியாகக் கிடக்கும். அதைச் சுற்றியிருந்த சதைகள், சதை நார்கள், நரம்புகள் எல்லாம் மக்கி எலும்புகள் மட்டும் கிடைக்கும்.

பிணக் குவியல்களை மண்போட்டு மூடுகிறார்கள். அதே இடத்தை 50 அல்லது 100 ஆண்டுகள் கழித்துத் தோண்டினால் எலும்புத் துண்டுகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக சிதறியும் உலர்ந்தும் கிடக்கும். அந்த எலும்புத் துண்டுகளுக்கு ஒரு உணர்வும் இருக்காது.

இப்படிப்பட்ட எலும்புத் துண்டுகளைப் பார்த்து "உலர்ந்த எலும்புகளே, கர்த்தருடைய வார்த்தைகளைக் கேளுங்கள். அப்பொழுது உயிரடைவீர்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சதையோடும், நரம்புகளோடும், உணர்வுகளோடும் வாழ்கிற மனிதர்களே கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்பதில்லை. உலர்ந்த எலும்புகள் எப்படிக் கேட்கும்? எப்படி உயிரடையும்?" என்று கேட்கத் தோன்றுகிறது.

மனித அறிவிற்கும், உணர்வுக்கும் எட்டாத காரியங்களைச் செய்கிறவரையே கர்த்தர் என்று சொல்லுகிறோம். மனிதனால் கூடாதது, தேவனாலே கூடும் அல்லவா?

என் மூளை செயலற்றுப் போய்விட்டது, என் நரம்புகள் தளர்ந்து விட்டன, என் எலும்புகள் உலர்ந்து போயின என்று சொல்லுகிறவர்கள் அனேகர்.

மனித சக்திகளுக்கு மீறின சக்தியைக் கடவுள் என்று சொல்லுகிறவர்களும் உண்டு. "எங்களால் இயன்றவரைக்கும் பார்த்து விட்டோம், இனி ஆண்டவன் விட்ட வழிதான்" என்று தங்கள் முயற்சி பலனளிக்காத போது கைகளை விரித்து விடும் மருத்துவர்கள் உண்டல்லவா?

லாசரு வியாதியாயிருக்கிறான் என்று இயேசுக் கிறிஸ்து கேள்விப்பட்டார். நமக்கு அன்பானவர்கள் அல்லது நெருங்கிய உறவினர்கள் வியாதியாயிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டால் உடனே ஓடிப் போய் பார்க்கிறோம். ஆனால் இயேசுவோ மார்த்தாள், மரியாள், லாசரு ஆகியோரிடத்தில் மிகவும் அன்பாயிருந்தாலும், லாசரு வியாதியாயிருக்கிறான் என்று கேள்விப்பட்ட பின்பும், மேலும் இரண்டு நாள் தான் இருந்த இடத்திலேயே இருந்தார்.

ஏனென்றால், “நான் அங்கே இராததினால் நீங்கள் என்னிடத்தில் விசுவாசமுள்ளவர்களாவதற்கு ஏதுவுண்டு” என்று இயேசு சொல்லியிருந்தார்.

மரணம் அடைந்த 24 மணி நேரத்திற்குள் புதைக்க அல்லது எரிக்க வேண்டும் என்பது அரசு கட்டளை. மிகப் பிரபலமானவர்கள் மரித்தால் கூடக் கொஞ்ச நாட்கள் வைத்திருப்பதுண்டு.

லாசரு அடக்கம் பண்ணப்பட்டு நான்கு நாட்களாயிற்று. குருடனின் கண்களைத் திறந்தவர் இவனை முன்னமே வந்து சுகமாக்கியிருக்கலாமே என்று நினைத்தவர்களுமுண்டு.

யவீருவின் குமாரத்தி வியாதியாயிருந்த போது இயேசுவை அழைத்தார்கள். ஆனால் இயேசு வருவதற்கு முன்பே அக்குமாரத்தி மரித்துவிட்டாள். இயேசு வந்தபோது, “அவரைத் தொந்தரவு செய்ய வேண்டாம், மகள் மரித்து விட்டாள்” என்றார்கள்.

விதவைத் தாயின் ஒரே மகன் இறந்த போது, அவனைப் பாடையில் சுமந்து கொண்டு வந்தார்கள். இயேசு பாடையை நிறுத்தி, அந்த வாலிபனைத் தொட்டு எழுப்பினார். யவீருவின் குமாரத்தியை எழுப்பினார். நான்கு நாட்கள் கழித்து, கல்லறையை மீண்டும் திறக்கச் செய்து லாசருவை எழுப்பினார்.

கர்த்தர் சகலவற்றையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாய் செய்திருக்கிறார், செய்து வருகிறார்.

நாமோ, விசுவாசத்தில் தடுமாறி, நிலைகுலைந்து, பின்மாறி, அங்கலாய்த்து, இங்குமங்கும் ஓடித் திரிகிறோம்.

உலர்ந்த எலும்புகளை ஒன்று சேர்த்து ஒரு பெரிய சேனைத் திரளாக மாற்றியமைக்க வல்லவரான கர்த்தரை நான்காவது இடத்தில் வைத்துவிடுகிறோம். ஆனாலும் ஜெபிக்கிறோம், ஜெபம் செய்யும்படி தெரிந்த இடங்களுக் கெல்லாம் S.M.S. அனுப்புகிறோம், தொலைபேசியில்

சொல்லியழுகிறோம், கடிதங்கள் எழுதுகிறோம். அல்லது பணத்தை வாரி இறைக்கிறோம். பலவிதமான மருந்துகள் மீதும் மருத்துவர்கள் மீதும் நம்பிக்கை வைக்கிறோம். மனிதன், பணம், மருந்து ஆகிய மூவராலும் இயலாத போது 'கர்த்தாவே' என்று ஆண்டவரிடம் சரண் அடைகிறோம். ஆண்டவரும் இப்படிப்பட்ட பூரண ஒப்புக் கொடுத்தல் வரும்வரை காணாதவர் போல இருந்து விடுகிறார்.

லாசருவை நினைத்துக் கொள்ளுங்கள். அடக்கம் பண்ணப்பட்டு நான்கு நாட்கள் கழித்து அவனுக்கு உயிர் கொடுத்தது எதற்காக? மற்ற அனேக மக்கள் இயேசுவை விசுவாசிப்பதற்காகவே! அனேக ஜனங்கள் இயேசுவைக் காண்பதற்காக மாத்திரமல்ல, மரித்தபின்பு நான்கு நாட்கள் கழித்து லாசருவை உயிரோடு எழுப்பினாரே, அந்த லாசருவைக் காணும்படியாகவும் வந்தார்கள். லாசருவின் நிமித்தமாக அனேக யூதர்கள் இயேசுவிடம் விசுவாசம் வைத்தார்கள். "ஓசன்னா, ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் இராஜா ஸ்தோத்தரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள். தேவனுடைய நாமம் மகிமைப் பட்டது.

நமக்கு ஏற்படும் சகல உபத்திரவங்களையும் தாங்கிக் கொள்ள வேண்டும். அப்பொழுது மட்டுமே நாம் மற்றவர்களுக்கு ஆறுதல் சொல்லத் தகுதியுள்ளவர்களாக இயலும்.

ஆபிரகாம் தன் சரீரம் செத்துப் போனதையும் (அதாவது உடலுறவு கொள்ள இயலாத நிலையை அறிந்திருந்தும்) சாராளுடைய கர்ப்பம் செத்துப் போனதையும் (ஸ்திரிகளுக்குரிய மாதக் கழிவு நின்று போனதையும் அறிந்திருந்தாலும்) தேவன் சொன்னதை விசுவாசித்து நீதிமான் என்று பெயரெடுத்தார். (எபிரெயர் 11: 11,12; ரோமர் 4:18.19)

யோசேப்பு எகிப்திலே எகிப்திய முறையின்படி அடக்கம்பண்ணப்பட்டார். அவர் மரணம் அடைவதற்கு முன்பு,

தன் எலும்புகளை கானான் தேசத்திற்கு கொண்டு போய் விடும்படிக் கேட்டுக்கொண்டார். (ஆதியாகமம் 50: 24–26; யாத்திரையாகமம் 4:18,19)உலர்ந்து காய்ந்து போன ஒரு சாதாரண ஆடுமேய்க்கும் கோல், எகிப்திலே அற்புதம் செய்து எகிப்தியரைக் கலங்கடித்தது. ஆரோனின் கையிலிருந்த உலர்ந்துபோன ஒரு கைத்தடி தளிர்த்து, இலை, பூ, காய், கனி என்று அற்புதம் செய்தது. எலிசாவின் எலும்பு பட்டவுடன் பிணம் உயிர் பெற்றது.

உலர்ந்து போன எலும்புகளுக்கு அவ்வளவு வல்லமையைத் தந்த தேவன் உங்களுக்குத் தரமாட்டாரா?

பவுல் அப்போஸ்தலர் எபேசியருக்கு எழுதும் போது, இயேசுக் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பின தேவனுடைய அதே வல்லமை விசுவாசிக்கிறவர்களிடத்திலும் காணப்பட வேண்டும் என்றார்.

கோதுமை மணி சாகாவிட்டால் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைத் தரும். உயிர்தெழ வேண்டுமானால் முதலில் மரிக்க வேண்டும். எப்படி மரிக்க வேண்டும்? பாபத்திற்கு, உலகத்திற்கு, சுயத்திற்கு மரிக்க வேண்டும். சுய நலம், சுய இச்சை, சுய இன்பம் போன்றவைகளுக்கு மரிக்க வேண்டும்.

இவைகளுக்கு உண்மையாக மரித்தவர்களின் உடம்பில் கர்த்தராகிய இயேசுவின் ஜீவன் விளங்கும். இப்படி அவருடைய ஜீவனைப் பெற்றவர்கள் மட்டுமே அவருடைய வருகையின் போது வெட்கப்பட்டுப் போகாமல் தைரியத்தோடு அவரை எதிர் கொண்டு போக இயலும்.

பாபத்திற்கு மரித்து, தேவனால் பிறக்கிற யாவரும் உலகத்தை (மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை) ஜெயிப்பார்கள். விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.

ஜெயங் கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்வான்.

உலர்ந்த எலும்புகள் உயிரடையும், ஜெயிக்கும், சுதந்தரிக்கும். பின் கவலை ஏன்?

பாபிகளை இரட்சிக்க இயேசுக் கிறிஸ்து ஒரு முறை பிறந்தார். அவரை ஒவ்வொரு ஆண்டும் பிறக்க வைக்க இயலாது. அப்படிச் செய்யவும் கூடாது. அவர் பிறந்த நோக்கத்தை உணர்ந்தவர்கள், அவருக்குள் மறுபடியும் பிறந்து, அவருக்கென்று வாழ வேண்டும்.

மறுபடியும் பிறக்க வேண்டும் என்பதை பிறந்த இயேசுவே உரைத்திருக்கிறார். அப்படியிருக்க மறுபிறப்பின் அனுபவமே இல்லாமல் கிறிஸ்து பிறப்பு பண்டிகை கொண்டாடுவது எப்படி?

பாபிகளை இரட்சிக்க இயேசுக்கிறிஸ்து பிறந்தார் என்ற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது என்பது உண்மையானால் பாபத்தில் வாழ்கிற கிறிஸ்தவர்கள் முதலாவது மனம் திரும்பி இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெறுதல் வேண்டும். இதற்கு 4 படிகள் உண்டு. முதலாவது தன்னைப் பாபி என்று உணர வேண்டும். இரண்டாவது பாபங்களை அறிக்கை செய்து விட்டு விடவேண்டும். மூன்றாவது யார்யாரிடம் அல்லது எவைகளில் பாபம் செய்தோமோ அதற்குரியவர்களிடம் ஒப்புரவாக வேண்டும், தேவனிடமும் ஒப்புரவாக வேண்டும். நான்காவது இரட்சிப்பின் சந்தோஷத்திற்குள் நுழைய வேண்டும்.

இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனித குமாரனாகிய இயேசுக் கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்திருக்கிறார். மேற்கண்ட செய்தியை இயேசுக் கிறிஸ்துவே சொல்லியிருக்கிறார்.

பாபத்தினால் மனிதன் தனக்குரிய எல்லாவற்றையும் இழந்துவிட்டான். சமாதானம், மகிழ்ச்சி, நல்வாழ்வு, சரீர சுகம், தெய்வபயம், பக்தி போன்ற அனேக நல்ல காரியங்கள் மனிதனை விட்டுப் போய்விட்டன.

பாபத்திற்காகவும், அதினால் உண்டாகும் சாபத்திற்காகவும் பலியான இயேசுக் கிறிஸ்துவை ஒருவன்

உணர்ந்து ஏற்றுக் கொள்ளும்போது, தான் இழந்த எல்லாவற்றையும் திரும்பப் பெற்றுக் கொள்கிறான்.

சத்யத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்க நான் பிறந்தேன் என்று இயேசு சொன்னார்.

பாபத்திற்குள் அகப்பட்ட மனிதன் சத்யத்தை மறந்து விட்டான். "நானே சத்யம்" என்றுரைத்த இயேசுக் கிறிஸ்து சத்யத்திற்கு சாட்சியாக வாழ்ந்தார். "என்னில் குற்றமுண்டு என்று யார் சொல்லக்கூடும்?" என்று கேட்டார்.

இயேசுக் கிறிஸ்துவின் மீது குற்றம் சுமத்தும் படியாக பரிசேயர், வேதபாரகர், நியாய சாஸ்திரிகள் போன்றோர் எவ்வளவோ முயன்றும் தோற்றுப் போனார்கள். இயேசுக் கிறிஸ்துவின் மேல் பழி சுமத்தும்படி இன்றைய காலங்களில் எத்தனையோ பேர்கள் புத்தகங்கள் எழுதுகிறார்கள். சினிமா படங்கள் எடுத்து வெளியிடுகிறார்கள். அவர்களுக்கும் தோல்வியே. ஏனென்றால் சத்யத்திற்கு சாட்சியாக பிறந்தவர் அவர் மட்டுமே. அவருடைய சத்தம் கேட்டு, அதின் வழி நடக்கிறவர்கள் சத்யவான்களாகிறார்கள்.

இயேசுக் கிறிஸ்து ஒருமுறை "நான் மற்ற ஊர்களிலும் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்துப் பிரசங்கிக்க வேண்டும், இதற்காகவே அனுப்பப்பட்டேன்" என்றார்.

தேவனுடைய இராஜ்ஜியம் பிரசங்கிக்கப்பட வேண்டும், எச்சரிக்கப்படவேண்டும், கட்டளையிடப்பட வேண்டும். ஒருத்தியின் மகனாகப் பிறந்த இயேசு, ஒருவராகவே கிராமங்களுக்கும் ஊர்களுக்கும் கால்நடையாக நடந்து சென்று எல்லா இடங்களிலும் பிரசங்கித்தார். அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட அவருடைய சீஷர்கள் அவருடைய பிரசங்கத்தைத் தொடர்ந்து செய்தார்கள், இன்றும் செய்து வருகிறார்கள்.

தம்மை ஏற்றுக் கொள்ளுகிறவர்களின் உள்ளங்களில் தாம் இராஜாவாக அமர்ந்து ஆளுகை செய்யவே அவர் விரும்புகிறார். உலகப் படத்தில் தேவனுடைய இராஜ்ஜியம்

இல்லை. அவருடைய வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளு கிறவர்களின் உள்ளங்களில் அதைக் காணலாம்.

இயேசு ஒருமுறை "மனிதகுமாரன் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாக தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" என்று தம்மைக் குறித்த பிறப்பின் இரகசியத்தை வெளிப்படுத்தினார்.

கடவுள் என்று நம்பப்படுகிற சிலவற்றை மனிதர் குளிப்பாட்டி, அலங்கரித்து, தூக்கி சுமந்து, ஊர்வலமாகக் கொண்டு செல்கிறார்கள். ஆனால் மனிதகுமாரனாகிய இயேசுக் கிறிஸ்து ஊழியம் கொள்ளும்படி வராமல், மனிதர்களுக்கு ஊழியம் செய்யும்படி இவ்வுலகத்தில் பிறந்தார்.

சமுதாயத்தில் கேவலமாக நினைக்கப்பட்ட வர்களுக்கும், பெரும் வியாதியுள்ளவர்களுக்கும், ஒதுக்கப்பட்ட சிறுபான்மை மக்களுக்கும் தொண்டு செய்தார். தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட சீடர்களின் கால்களை ஒரு அடிமையைப் போலக் கழுவினார்.

பிதாவின் பெயரை வைத்துக் கொண்டு அவர் ஆடம்பரமாகவோ, உல்லாசமாகவோ, தங்களுக்குப் பணிபுரியும் குற்றேவல் காரர்களை வைத்துக் கொண்டு பெருமை பாராட்டவோ அவர் வரவில்லை. அவர் ஒரு வேலைக்காரனைப் போல வந்தார். வேலை செய்தார்.

அதுமட்டுமல்லாமல், அவர்களுக்காகத் தமது ஜீவனையே கொடுத்தார். நல்லவனுக்காக ஒருவன் தன் உயிரைக் கொடுக்க முன்வரலாம். சிநேகிதனுக்காக உயிர்கொடுப்பேன் என்று சிலர் சொல்லலாம். ஆனால் பாபிகளுக்காக தேவாதி தேவன் தமது ஜீவனையே கொடுத்தார் என்பது அன்பின் விளக்கமாகும். தம்முடைய

ஜீவனையே கொடுத்தவர் அத்துடன் மற்ற எல்லாவற்றையும் தர வல்லவராயிருக்கிறார்.

அனேகர், நாட்டுக்காக, கட்சிக்காக, மொழிக்காக, இனத்திற்காக ஜீவனைக் கொடுக்கலாம். அதனால் மற்ற ஆத்துமாக்கள் இரட்சிப்பு அடைவது இல்லை. மேலும் இப்படி ஜீவனைக் கொடுப்பவர்கள் அத்துடன் மறைந்து விடுகிறார்கள், உறவினர்களால் சிலகாலமும், உடன் பிறந்தோர், மனைவி, பெற்றோர், பிள்ளைகளால் இன்னும் சில காலங்களும் நினைக்கப்படலாம். பின்பு, அப்படி மரித்தோர் மறக்கப்படுவார்கள். அரசியல் தலைவர்களுக்கு சிலை செய்து வைப்பார்கள். ஆண்டுக்கொரு முறை பிறந்த நாள் அல்லது இறந்த நாளன்று மாலை அணிவிப்பார்கள்.

இயேசுக் கிறிஸ்து அப்படியல்ல. அவர் ஜீவனைக் கொடுத்தார். மீண்டும் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து இன்னும் ஜீவனோடிருக்கிறார். அவரை மனிதன் கொல்லவில்லை. அவர் தாமாகவே தமது ஜீவனைக் கொடுத்தார். [யோவான் 10:17,18]

இயேசுக் கிறிஸ்து உலகத்தில் மனிதனாகப் பிறந்த நோக்கம் பரலோகத்தின் நல்ல செய்தியை அறிவிக்கவே யாகும். அறிவித்தல் அல்லது பிரசங்கித்தல் என்பது, மனிதனுக்கு எட்டாத இரட்சிப்பு, மீட்பு, முக்தி என்பதின் பொருளை விளக்குவதாகும்.

இது எச்சரிப்பும் ஆகும். லூக்கா 13:3,5 ஆகிய வசனங்களில், இச்செய்தியைக் கேட்டும் மனந்திரும்பாத வர்களின் நிலை என்னவாகும் என்று எச்சரிப்பதைக் காணலாம்.

இப்படிப் பிரசங்கிப்பது தேவன் அருளும் கட்டளையுமாகும். அப்போஸ்தலர் 17:30ம் வசனத்தில் இதைக் காணலாம்.

இயேசு பிரசங்கித்தவைகளை, அவரை ஏற்றுக் கொண்டவர்களும் பிரசங்கிக்க வேண்டும். பிரசங்கிக்கா விட்டால் அப்படிப்பட்டவர்களுக்கு "ஐயோ" (ஆபத்து) என்று பவுல் அப்போஸ்தலர் சொல்லுகிறார்.

இயேசு பிறப்பின் நற்செய்தியை ஒருவன் ஏற்றுக் கொண்டு, அவருக்குள் புது சிருஷ்டியாக வாழும்போது அவர்களுக்கு இயேசு பரிபூரண ஜீவனைத் தருகிறார். "திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவுமே வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அந்த ஜீவன் பரிபூரணப்படவுமே வந்தேன்" என்று இயேசு சொன்னார்.

திருடனாகிய பிசாசு, உங்களுக்குத் தெரியாமலேயே உங்கள் மகிழ்ச்சியையும், சமாதானத்தையும், சுகத்தையும் திருடிக் கொள்வான். ஆனால் இயேசுக் கிறிஸ்து, அந்த மரணமாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினால் கொன்று, மரணப்பிடியில் அகப்பட்டுக் கொண்டு தவிக்கிற பாபிகளை மீட்டு, இரட்சித்து அவர்களுக்கு ஜீவனைத் தருவதுடன், அந்த ஜீவன் பரிபூரணப்பட்டுப் பரலோகம் செல்லவும் வழி நடத்துகிறார்.

இயேசுக் கிறிஸ்து உலகத்தில் மனிதனாகப் பிறந்த நோக்கம் மனித ஆத்ம இரட்சிப்புக்காக மட்டுமல்ல. கடைசி நாளில் வெள்ளை சிங்காசனத்தின் மேல் அமர்ந்து எல்லோரையும் நியாயந்தீர்க்கவும் செய்வார். ஒவ்வொரு வருடைய கிரியைகளுக்கும் தக்கதாக அவரவர்களுக்கு இயேசுக் கிறிஸ்துவாலே நியாயத் தீர்ப்புக் கிடைக்கும்.

கிறிஸ்துமஸ் நாடகளில் பண்டிகை கொண்டாடுகிற நேரத்தில் இவைகளையெல்லாம் நினைக்காமல் கேளிக்கைகளிலும், ஆடம்பரச் செலவுகளிலும், உல்லாசங்களிலும், பாபகாரியங்களிலும் ஈடுபடுகிறவர்கள்,

நியாயத்தீர்ப்பு ஒன்று உண்டு என்பதையும் நினைவு கூர்ந்து கொண்டாடினால் நலம்.

கிறிஸ்து இயேசு உலகில் பிறந்த நற்செய்தியினை மற்றவர்களுக்குப் பகிர்ந்து தரவும், அவர்களைப் பண்டிகையின் பெயரால் வீட்டுக்கு வரவழைத்து உணவு தந்து (விசேஷமாக ஏழைமக்கள்) மகிழவும் கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வாராக. ஆமென்.

[இச் செய்தியினை நன்றாக வாசித்த பின்பு, இயேசு உலகத்தில் மனிதனாகப் பிறந்த நோக்கத்தின் ஏழு முக்கியமான காரியங்களை மட்டும் சில வார்த்தைகளாலே எழுதி அனுப்பினால், சரியாக எழுதுபவர்களுக்கு 2008ம் ஆண்டு நாள் காட்டி அனுப்பி வைக்கப்படும். உதாரணம் : 1. மலைமேல் ஏறி ஜெபிக்க. 2. தண்ணீர் மேல் நடக்க 3. ஊர்ஊராய் சுற்ற – போன்ற மாதிரி ஏழு காரியங்களை மட்டும் எழுதியனுப்புக]

❄❄❄❄❄❄❄

## சிந்திப்பீர்

*உலர்ந்த எலும்புகள்*
*உயிரடையும் போது – நீங்கள்*
*உயிர் மீட்சியடையாமல் இருப்பது சரியா?*

# எபேசியர் 1 : 19

# அப்போஸ்தலனாகிய

# யூதா

# எழுதின பொதுவான நிருபம்

பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப் பட்ட விசுவாசத்திற்காக விசுவாசிகள் தைரியமாய்ப் போராடவேண்டும் என்று எழுதி உணர்த்துவதை மூன்றாம் வசனமும், ஏன் அப்படிப் போராட வேண்டும் என்பதற்கான காரணங்களை நான்காம் வசனத்திலும் கண்டோம்.

அவர்களில் சிலர் தேவனுடைய கிருபையை காமவிகாரத்துக்–கேதுவாகப் புரட்டினார்கள். கர்த்தரையும் இயேசுக்கிறிஸ்துவையும் மறுதலித்தார்கள். இவர்கள் நேர் வழியாய் வராமல் பக்க வழியாய் நுழைந்திருக்கிறார்கள். இப்படிப் பட்டவர்களுக்கு ஆக்கினையுண்டு.

இனி, ஐந்து, ஆறு, ஏழு ஆகிய வசனங்களைப் படிப்போம். இம்மூன்று வசனங்களையும் படிக்கும் போது முதலாவது ஆறாம் வசனத்தையும் பின்பு ஐந்து, ஏழாம் வசனத்தையும் படிப்பது நல்லது.

ஆறாம் வசனத்தில் தேவனுடைய ஆதிமேன்மையைக் காத்துக் கொள்ளாமல் தங்களுக்குரிய இருப்பிடத்தை விட்டுவிட்ட தூதர்கள் நியாயத்தீர்ப்பின் நாளுக்காக அந்தகாரத்தில் அடைத்து வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

தூதர்கள் என்னும்போது, (1) தான் உண்டாக்கிய இவ்வுலகத்தைக் காப்பாற்றுவதற்காக உண்டாக்கப்பட்ட பிரதான தூதனாகிய லூசிபர் மற்றும் அவனுடைய படையாகிய தூதகணங்கள், (2) வானமண்டலங்களில் போரிடுவதற்காக உண்டாக்கப்பட்ட பிரதான தூதனாகிய மிகாவேல் மற்றும்

அவனுடைய தூதகணங்கள், (3) தேவனிடமிருந்து செய்திகளைக் கொண்டுவருவதற்காக உண்டாக்கப்பட்ட பிரதான தூதனாகிய காபிரியேல் மற்றும் அவனுடைய தூதகணங்கள் ஆகிய முக்கூட்டங்களை அறிய வேண்டும்.

இங்கே, யூதா குறிப்பிடுவது லூசிபர் என்னும் தூதனாகும். இத்தூதனைக் குறித்து எசேக்கியல் 28ம் அதிகாரம் 12–15 வரையிலும் ஏசாயா 14ம் அதிகாரம் 12–15 வரையிலும் காணலாம். ஆதியில் தேவன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின பின்பு, பூமியைக் காப்பாற்று வதற்காக இந்த லூசிபர் தூதனை உண்டாக்கி, அவனை முத்திரை மோதிரமாகவும், பூரண அழகுள்ளவனாகவும், ஞானத்தில் நிறைந்தவனாகவும், அபிஷேகம் செய்யப்பட்டவனாகவும், விடிவெள்ளி நட்சத்திரமாகவும் வைத்தார். இவன் பொன்னினாலும், இரத்தினக் கற்களினாலும் சிங்காரிக்கப்பட்டு, தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தான்.

ஆனால் போகப்போக, இவனுக்குள் கீழ்ப்படியாமை குணம் ஏற்பட்டு, தேவன் வைத்த இடத்தில் இருக்க மனமின்றி வானத்திற்குப் போனான். அங்கே சென்று தான் தேவனுக்குச் சமம் என்று பெருமை பாராட்டினான். தேவன் அவனை தமது அக்னிமயமான கண்களினால் சுட்டெரித்து, அவனை வானத்திலிருந்து தள்ளிவிட்டார்.

இத்தூதனையே நாம் சாத்தான், பேய், பிசாசு, காத்து, கருப்பு, எரிந்து போன கொள்ளி, வலுசர்ப்பம், பழைய பாம்பு, அந்தகாரத்தின் லோகாதிபதி, இருளின் மைந்தன் போன்ற பெயர்களினால் அழைக்கிறோம்.

தேவனாகிய கர்த்தர் இந்த லூசிபருக்கு எல்லா மேன்மைகளையும் கொடுத்தார். ஆனால் இதற்கும் மேலாக அவன் ஆசைப்பட்டதினால் பிசாசாகப் போனான்.

தாவீதுக்கு, அகினோவாம், அபிகாயில் என்ற இரண்டு மனைவிகள் உண்டு. கர்த்தர் தாவீதுக்கு எல்லாவற்றையுங் கொடுத்திருந்தார். ஒருவேளை தாவீது, இதுபோதாது என்று சொன்னால் இன்னுங் கொடுத்திருப்பார். ஆனால் உரியாவைக் கொன்று, அவன் மனைவியாகிய பத்சேபாள் என்பவளையும் சேர்த்துக் கொண்டது கர்த்தருக்குப் பிரியமில்லாதிருந்தபடியினால் பயங்கரமான தீர்ப்பு கிடைத்தது. (2 சாமுவேல் 12:8–14)

சாலொமோன், இஸ்ரவேலில் மட்டுமல்லாமல் மற்ற தேசங்களிலும் புகழ் பெற்றிருந்தான். அவனுக்கு இல்லாதது எதுவுமே இல்லை. ஆயினும், எகிப்து, மோவாப், அம்மோன், ஏதோம், சீதோன், ஏத்தியா போன்ற நாடுகளில் உள்ள அன்னிய ஜாதியாரான ஸ்திரிகள் மேல் ஆசை கொண்டான். அவனுடைய அரண்மனையிலே அவனுக்கு எழுநூறு மனைவிகளும், முந்நூறு மறுமனையாட்டிகளுமாக ஆயிரம் பேர் இருந்தனர். அவர்கள் இவனுடைய மனதை வழுவிப் போகப்பண்ணி, தங்களுடைய விக்ரக தெய்வங்களை வணங்கவும், அவைகளுக்குக் கோயில்களைக் கட்டவும் தூண்டினார்கள். ஜீவனுள்ள தேவனைவிட்டு சாலொமோன் அந்நிய தேவர்களைப் பின்பற்றினான். கர்த்தர் அவனுக்கு இரண்டு விசை தரிசனமாகி புத்தி சொல்லியும் அவன் கர்த்தரை விட்டு தன் இருதயத்தைத் திருப்பினான். இதினால் கர்த்தர் அவனுடைய இராஜ்ஜிய பாரத்தைப் பிடுங்கி யெரோபெயாமின் கைகளில் கொடுத்தார்.

கர்த்தர் தமது கிருபையினாலே ஒருவனை உயர்த்தினால், அந்த உயர்ந்த நிலையை தாழ்மையினாலே அவன் காத்துக் கொள்ள வேண்டும்.

பெயரும், புகழும், பணமும், செல்வாக்கும் கிடைத்தவுடன் கர்த்தருடைய வழிகளை விட்டு விலகுவது சரியல்ல.

இன்னும் உயர எழுப்பிப்போக நினைக்கிறவர்கள் அரசியல் வாதிகளின் உதவியையும் ஆன்மீக வாதிகளான பிறமதத் தலைவர்களின் உதவிகளையும் தாங்கள் பெற்ற காணிக்கைப் பணங்களைக் கொண்டு இலஞ்சம் கொடுத்தாவது அடைய நினைப்பார்கள். சிலர் பணம் கிடைத்தவுடன் உல்லாச வாழ்க்கை வாழ விரும்புவார்கள். உல்லாசம் சல்லாபத்திற்கு வழி நடத்தும். முடிவில் குடி, விபசாரம் போன்ற பாபங்களில் விழுவார்கள்.

ஆயினும் இவர்கள் விசுவாசிகள் போல அல்லது தேவனுடைய ஊழியக் காரர் போலக் காணப்படுவார்கள். கனியற்ற பாழ்மரங்களாக உலாவரும் இவர்களுக்கு நியாயத்தீர்ப்பில் பலன் வைக்கப்பட்டிருக்கும். இனங்கண்டு கொள்ளுதல் நலம். எச்சரிப்பாய் இருப்பது அதனிலும் நலம்.

இனி, ஐந்தாம் வசனம் சொல்லுவது என்னவென்றால், கர்த்தர் தமது ஜனத்தை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி, இரட்சித்து, பின்பு விசுவாசியாதவர்களை அழித்தார்.

ஏன் அழித்தாரெனில், அவர்கள் தங்களை இரட்சித்த தேவனை மறந்து, புசிப்பிலும், குடிப்பிலும், விளையாட்டிலும் இறங்கி விக்கிரக ஆராதனைக் காரரானார்கள்; வேசித்தனம் பண்ணினார்கள், தேவனைப் பரீட்சித்தார்கள், முறுமுறுத்தார்கள். இப்படிப் போன்ற காரியங்களை யெல்லாம் அவர்களைக் கொண்டே எழுதி, பாதுகாக்க வைத்து, இன்றும் நமக்கு இவைகள் நமக்கு எச்சரிப்பாகவும் திருஷ்டாந்தங் களாகவும் வைக்கப்பட்டிருக்கின்றன. அப்படியே ஏழாம் வசனத்தில்; சோதோம் கொமோரா பட்டணத்தார்களும் அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும் அவர்களைப் போல (இஸ்ரவேலரைப் போல) விபசாரம் பண்ணி, அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து, நித்திய அக்னியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாந்தமாக (அடையாளங்களாக, சாட்சியாக) வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

சோதோம் கொமோரா பட்டணங்கள் மிகவும் செழிப்பான இடங்கள். செழிப்பைப் பார்த்து லோத்து, தான் அதின் பக்கம் போக விரும்புவதாக ஆபிரகாமிடம் சொன்னான். சோதோமின் அக்கிரமம் என்ன என்பதை எசேக்கியல் தீர்க்கதரிசி சுட்டிக் காட்டுகிறார். "கெர்வமும், ஆகாரத்திரட்சியும், நிர்விசாரமான சாங்கோ பாங்கமுமாகிய இவைகளே சோதோமின் அக்கிரமம்" (எசேக்கியல் 16:49)

வேசித்தனமும் விபசாரமும் கர்த்தருடைய பார்வையில் அருவருப்பான பாபமாகும். அதைவிட அதிக அருவருப்பான ஓரினச் சேர்க்கை (ஆணுடன் ஆண் புணர்ச்சி செய்தல்) சோதோம் மக்களுக்குள் இருந்தது. சோதோமின் செழிப்பு அம்மக்களை விபரீதமான பாபங்களுக்குள் இழுத்துவிட்டது. செழிப்பு வந்தால் சிந்தை மாறும், செயலும் மாறும். செழிப்பு உபதேசம் விரும்புவோரும் பிரசங்கிப்போரும் விழித்துக் கொள்க.

வேதபுத்தகத்தின் ஆரம்ப முதல் கடைசிவரை இதைக் குறித்து கர்த்தர் சொல்லுகிறார். உபாகமம் 29:23; 32:32; ஆமோஸ் 4:11; ஏசாயா 1:9; 3:9; 13:19; எரேமியா 23:14; 49:18; 50:40; செப்பனியா 2:9; புலம்பல் 4:6; எசேக்கியல் 16:46,49,53,55; மத்தேயு 10:15; 11:24; லூக்கா 10:12; 17:29; ரோமர் 9:29; இரண்டுபேதுரு 2:6; வெளிப்படுத்தல் 11:8.

சோதோம் கொமோராவின் அக்கிரமம் ஆதியாகமம் 19:1–11 வரையிலும் அதின் தண்டனை 12–28 ஆகிய வசனங்களிலும் காணக் கிடைக்கும்.

ஹோமோ செக்ஸ் ஆகிய பாபத்தை நியாயப்படுத்தி திருச்சபைகளில் ஆணுக்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் பெண்ணுக்கும் திருமணம் செய்து வைக்கும் மேலை நாடுகள் எவ்வளவு கேடுகெட்ட நிலைமைக்குத் தள்ளப்பட்டு வருகின்றன என்பதையாவது நினைத்துப்பாருங்கள்.

(இன்னும் வரும்)

# திவ்ய வாசகனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம்

**வெளிப்படுத்தல் 18:20**

“பரலோகமே! பரிசுத்தவான்களாகிய அப்போஸ்தலர்களே! தீர்க்கதரிசிகளே! அவளைக் குறித்துக் களிகூருங்கள். உங்கள் நிமித்தம் தேவன் அவளை நியாயந்தீர்த்தாரே! என்று தூதன் சொன்னான்”.

ரோமப் பேரரசைக்குறித்துப் பாடின புலம்பல்களின் நடுவே மகிழ்ச்சியின் சத்தமும் கேட்கிறது. கிறிஸ்தவ மக்களைத் துன்புறுத்தி, வதைத்து, சிதைத்து, கொடூரமான முறையில் கொன்று குவித்த ரோமப் பேரரசை கர்த்தர் பழிவாங்குகிற நியாயத் தீர்ப்பின் சத்தம்.

இப்படிப்பட்ட வசனங்களை உபாகமம் 32:43; எரேமியா 51:48 ஆகிய வசனங்களிலும் காணலாம். “பழிவாங்குதல் எனக்குரியது” என்று சொன்ன கர்த்தர் மனிதர்களைப் பழிவாங்கச் சொல்லவில்லை. இது பழிவாங்கும் சொல்லாக எடுத்துக் கொள்ளாமல் தங்களுக்குக் கர்த்தர் நீதி செய்வார் என்ற விசுவாசத்துடன் இருந்த கிறிஸ்தவ விசுவாசிகளின் விசுவாசத்தையே குறிக்கும். கர்த்தரைச் சார்ந்து வாழ்பவர்கள் ஒரு போதும் வெட்கப்படுவதில்லை.

ரோமர்கள் கிறிஸ்தவர்களுக்கு எதிரிகள் அல்ல. மாறாக கிறிஸ்துவுக்கே எதிரிகளாய் காணப்பட்டனர். கிறிஸ்தவர்களும் ரோம அரசை நினைத்தே தேவனிடம் விண்ணப்பித்தனரேயன்றி, ரோமர்களைத் தங்கள் எதிரிகளாக நினைக்கவில்லை.

ஆபிரகாம் லிங்க்கன் என்ற ஐக்கிய அமெரிக்க குடியரசுத் தலைவர் ‘எதிரிகளுக்கு மிகவும் இளக்காரம் கொடுத்து விட்டார். எதிரிகளை அழிக்க மறுத்து விட்டார்’ என்ற குறையை அனேகர் அப்போது சொன்னார்கள். அதற்கு

லிங்கன்; நான் என் எதிரிகளை நேசிக்க ஆரம்பித்தவுடனே அவர்களை அழித்துவிட்டேன் என்பது உங்களுக்குத் தெரியாதா?'' என்று கேட்டாராம்.

உங்களைப் பகைக்கிறவர்களை சிநேகியுங்கள் என்பது இயேசுவின் புதிய பிரமாணமாகும்.

வெளிப்படுத்தல் 18 :21–24

இவ்வசனங்களில் ரோம அரசின் அழிவு படம் போலக் காட்டப்படுகிறது. ஒருபலமுள்ள தூதன் பெரிய கல்லை எடுத்து சமுத்திரத்திற்கு வீசி எறிந்து, இவ்விதமாக ரோமப் பேரரசு அழிந்துபோகும் என்றான்.

பத்மு தீவில் இருந்த யோவானுக்கு, கர்த்தர் பாபிலோனுக்குச் செய்த காரியம் நினைவுக்கு வந்திருக்கும். ``நீ இந்த புத்தகத்தை வாசித்து முடித்தபின்பு, அதிலே ஒருகல்லைக் கட்டி, அதை ஐப்பிராத்து நதியின் நடுவில் எறிந்துவிட்டு, இப்படியே பாபிலோன் முழுகிப் போகும், நான் அதின் மேல் வரப்பண்ணும் தீங்கினால் எழுந்திருக்க மாட்டாமல் இளைத்து விழுவார்கள் என்றார் என்று சொல்வாயாக என்றார்''. (எரேமியா 51:63,64)

ஸ்ட்ரேபோ என்ற கிரேக்கு நாட்டின் புவிஇயல் அறிஞர் பாலைவனமாகக் கிடந்த பாபிலோன் தேசத்தில் அப்படிப்பட்ட ஒரு நகரம் இருந்ததா என்று நினைத்துக் கூடப் பார்க்க இயலாது என்கிறார்.

``உன்பாட்டுகளின் சத்தத்தை ஓயப்பண்ணுவேன்; உன் சுரமண்டலங்களின் சத்தம் இனி கேட்கப்படுவதில்லை. உன்னை வெறும் பாறையாக்கிவிடுவேன். நீ வலைகளை விரிக்கிற ஸ்தலமாக இருப்பாய். இனிக் கட்டப்படாய்'' (எசேக்கியல் 26:13,14) என்ற வசனம் தீருவைக் குறித்து சொல்லப்பட்டது. இந்நாள் வரை அது அப்படியே இருக்கிறது. இது ஒரு காலத்தில் பெரிய வர்த்தக கப்பல் துறை வளம் நிறைந்த நாடாக இருந்தது.

ரோமப் பேரரசு ஒழிந்து போயிற்று. அதற்குக் காரணம் அவர்கள் பணத்தையும் சுகபோக வாழ்க்கையையும் விரும்பினார்கள். ஒழுக்கமற்ற வாழ்வையும் உலகப் பிரகாரமான பொருட்களையும் விரும்பினார்கள். எசேக்கியல் 24:6ல் இது, இரத்தம் சிந்திய நகரம் என்று சொல்லப் பட்டுள்ளது.

வெளிப்படுத்தின விசேஷத்தின் கடைசி நான்கு அதிகாரங்களைப் படிப்பதற்கு முன்பு, அவைகளிலடங்கிய முக்கிய காரியங்களை அறியப் பெறுவது அவசியம்.

வெளிப்படுத்தல் 19:1–10 வசனங்கள் வரையில் பாபிலோன் தகர்ந்து ஒன்றுமில்லாமற் போனதினிமித்தம் எழுந்த மகிழ்ச்சியின் ஆரவாரம். 11–18 வரையிலுள்ள வசனங்களில் உண்மையும் சத்தியமுமுள்ளவர் வெள்ளைக் குதிரையின் மேல் ஏறிவருகிற காட்சி. 19ம் வசனம் பூமியின் இராஜாக்களும் சேனைகளும் குதிரைமேல் இருக்கிறவருக்கு எதிராகப் புறப்படும் காட்சி. 20,21 ஆகிய வசனங்களில் மிருகம், கள்ளத் தீர்க்கதரிசி ஆகிய இருவரும் பிடிக்கப்பட்டு குதிரையில் ஏறினவருடைய பட்டயத்தினால் கொல்லப்படும் காட்சி.

இருபதாவது அதிகாரம் 1–3 வரையுள்ள வசனங்கள் சாத்தான் ஆயிரம் வருஷங்கள் கட்டப்படுதலைக் குறித்தும், 4–6 வரையுள்ள வசனங்கள், இரத்த சாட்சியாய் மரித்த விசுவாசிகள் உயிர்த்து பூமியை ஆயிரம் வருஷங்கள் அரசாட்சி செய்வதைக் குறித்தும், 7–10 வரையுள்ள வசனங்கள் ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் சாத்தான் விடுவிக்கப்படுதலும், சாத்தான் அக்னிக் கடலில் தள்ளப்படுதலும், 11–14 வசனங்களில் பொதுவான உயிர்த்தெழுதல், நியாயத் தீர்ப்பு பற்றியும், 21ம் அதிகாரம் முதலிலிருந்து 22ம் அதிகாரம் 5ம் வசனம் முடிய, ஏற்கெனவே தேவசமுகத்தினின்றும் அகன்று போன பூமிக்கும் வானத்திற்கும் பதிலாக (வெளிப்படுத்தல் 20:11) புதிய வானமும் புதிய பூமியும் தோன்றுதலும் சொல்லப்பட்டுள்ளன.

இனி, 19ம் அதிகாரம் முதல் இரண்டு வசனங்களைச் சிந்திக்கலாம்.

பரலோகமே! பரிசுத்தவான்களாகிய அப்போஸ்தலர் களே! தீர்க்கதரிசிகளே! அவளைக்குறித்துக் களிகூருங்கள். உங்கள் நிமித்தம் தேவன் அவளை நியாயந்தீர்த்தாரே என்று (வெளிப்படுத்தல் 18:20) சொன்ன தூதனுடைய சத்தத்தைக் கேட்டுக் களிகூர்ந்த ஜனங்களின் ஆரவாரத்தைக் காணலாம்.

மகா சத்தமிட்டு தேவனை மகிமைப்படுத்தின திரள் கூட்டமாகிய ஜனங்களின் சத்தத்தை வெளிப்படுத்தல் 7:9,10லும் தூதர்களின் சத்தத்தை வெளிப்படுத்தல் 5:11,12 ஆகிய வசனங்களிலும் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம்.

அல்லேலூயா என்ற வார்த்தை அனேகமாக விசுவாசிகளுக்குப் பிரியமான வார்த்தையாகும். லுத்தரன் சபையார் தங்கள் ஆராதனையில் இதை மிக அழகாகப் பாடுவார்கள். பெந்தெகோஸ்தே பிரசங்கிமார்கள் தாங்கள் பிரசங்கிக்கும் போது அடிக்கடி சொல்லுவதுமட்டுமல்லாமல் கேட்கிறவர்களையும் சொல்ல வைப்பார்கள். கர்த்தரிடத்தில் பிரியமாயிருக்கிற எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் இது சரளமாக வரும்.

ஆயினும் வெளிப்படுத்தின விசேஷத்தில் நான்கு முக்கியமான இடங்களில் இவ்வார்த்தை வருகிறது. வார்த்தையின்படி மொழிபெயர்த்தால் அல்லேலூயா என்ற எபிரெயமொழி "கர்த்தரைத் துதி" என்று பொருள் படும். அலல் அல்லது ஹலல் என்றால் 'துதி' என்றும் 'யா' என்றால் கர்த்தர் என்றும் பொருளாகும்.

சங்கீதம் 113 – 118 வரை துதியின் சங்கீதம் என்று வேத பண்டிதர்கள் சொல்லுவார்கள். சங்கீதங்கள் 106,111,112,113,117,135,146,147,148,149,150 ஆகியவற்றிலும் இந்த அல்லேலூயாவைப் பார்க்கலாம்.

இந்த எபிரெய வார்த்தையை கிரேக்கு மொழியிலும் அப்படியே ஏற்றுக் கொண்டார்கள். உலகின் அனேக

மொழிகளில் மொழி பெயர்க்கப்படாத வார்த்தை இதுவேயாகும்.

இரட்சிப்பு, வல்லமை, மகிமை ஆகிய மூன்றும் கர்த்தருக்குரியவைகள். பாபி இரட்சிக்கப்படும் போது அவனுடைய உள்ளத்தின் ஆழத்திலிருந்து கர்த்தருக்கு நன்றியுள்ளவனாகிறான். ஆகையால் அவன் கர்த்தரை துதிக்கும்படி அல்லேலூயா சொல்லுகிறான்.

பாபியைக் கர்த்தர் பரிசுத்தனாக்கும் பொழுது அது அவனுக்குள்ளிருக்கும் தேவ வல்லமையை வெளிப்படுத்தி அவனுடைய உள்ளிந்திரியங்களை எழுப்புகிறது. அவன் தேவனை தேவவல்லமையினால் மகிமைப்படுத்துகிறான். எனவே அல்லேலூயா சொல்லுகிறான்.

தேவமகிமை ஒரு பாபியை பக்தியுள்ளவனாகவும் கர்த்தருக்குப் பயப்படுகிறவனாகவும் மாற்றுகிறது. ஆகையால் அவன் அல்லேலூயா சொல்லுகிறான். உண்மையான துதியில் ஆழ்ந்த நன்றி, தேவவல்லமை, தேவ மகிமை ஆகிய மூன்றும் பகுதியாக இருக்க வேண்டும்.

கடமைக்கு ஓசைகளை எழுப்பி, துதிக்கிறேன் என்ற பெயரில் கூச்சல் போடுவதும், ஆடிவிழுவதும், பரவசமடைவதும் ஆராதனையுமல்ல, துதியும் அல்ல.

தெய்வ பயம், நன்றியுள்ள உள்ளம், தேவமகிமை ஆகியவை ஆராதனை வேளையில் காணப்பட வேண்டும்.

பாபத்தின் சம்பளமாகிய மரணத்தினின்று யாரும் தப்ப இயலாது. கர்த்தர் நீதியுள்ள நியாயாதிபதியாக செயல்பட்ட படியினால், அவர் துதிக்கப்படத்தக்கவரும், புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார்.

கர்த்தர் ஒருவரே உண்மையுள்ள நியாயாதிபதி யாயிருக்கக் காரணம், அவர் மனிதனின் உள்ளத்தை அறிந்திருக்கிறார். உண்மை எது என்று தெரியாததற்கு முன்பே தப்பெண்ணம் கொள்ளும் மனிதனைப் போல அவர் நியாயந்தீர்ப்பதில்லை. அவர் ஒருவரே ஞானமாய்

நியாயந்தீர்க்கவும் அத்தீர்ப்பை வழங்கவும் அதிகாரம் கொண்டவராவார்.

பதினெட்டாம் அதிகாரத்தில் வரும் வேசி, உலகத்தை கறைப்படுத்தினபடியால் அவளைக் கர்த்தர் நியாயந்தீர்த்தார். பாபங்களிலேயே பயங்கரமானது எதுவெனில் மற்றவர்களைப் பாப வழிகளில் நடத்துவது.

தம்முடையவர்களைத் தேவன் விலக்கிவிடவில்லையென்பதற்கு ரோமப் பேரரசு ஆண்டவரால் தண்டிக்கப்பட்டதே மெய்யான சாட்சி. (தொடரும்)

# வேண்டுகோள்

அக்னி ஊழியத்தின் வழியாக எரையூர் கிராமத்தில் பிரைமரி ஆங்கிலப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மிகவும் பின்தங்கிய மக்களைக் கொண்ட இக்குக்கிராமம் அக்னி ஊழியத்தினால் மறுமலர்ச்சி அடைந்துள்ளது. மூவழி மின்சாரம், ஆம்புலன்ஸ் சேவை போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

சரியான கல்விப் பயிற்சி இல்லாத இக்கிராம மக்கள் அனேகர் கேட்டுக் கொண்டதற்கிணங்க 2007–ஜுலை மாதத்திலிருந்து பிரைமரி ஆங்கில வழிக்கல்விச் சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் 26 இளம்பிராயச் சிறுவர் சிறுமியர் படித்து வருகிறார்கள். மூன்று ஆசிரியைகள் திறம்படக் கல்வி கற்பிக்கின்றனர்.

2008 ஜுன் மாதத்திற்கு முன்பு நான்கு வகுப்பறைகள் கட்டி முடிக்க வேண்டும். இதற்கான செலவுகளை வாசகர்களும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். உங்கள் காணிக்கைகளை குறிப்பிட்டு அனுப்புங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். நன்றி.

**சாது செல்லப்பா**

# ஒரேயொரு ஊரிலே

ஒரேயொரு காடு இருந்தது. அந்தக் காட்டிலே எல்லா மிருகங்களும் சௌஜன்யமாக வாழ்ந்திண்டிருந்தன. காரணம் மாதம் மும்மாறி பெய்தது, மனுஷாள் இல்லை, தேவையான ஆகாரம் ஆகியவை

ஒரு நாள் எல்லா மிருகங்களும் ஒரு இரவு நேரத்தில் கூடிப் பேசிண்டிருந்தன. ‘‘நியூஸ் பார்த்தேளா, உங்க சிறுத்தை யொன்று ஊருக்கு பக்கத்திலே உலாத்திண்டிருந்ததாமே’’ என்று கேட்ட வண்ணம் கிறிஸ்தியானும் வந்து உட்கார்ந்திட்டார். அதற்கு பேபி மான், ‘‘அதுக்கு மனுஷாள் தானே காரணம், இல்லையா அங்க்கிள்?’’ என்று கேட்டது.

‘‘நாங்களா வரச் சொன்னோம்?’’ என்று திருப்பிக் கேட்ட கிறிஸ்தியான் சுற்றிலும் ஒரு ‘லுக்’ விட்டார். தான் பேபிமானை மடக்கி விட்டதாக எண்ணம். அதற்கு பேபிமான், ‘‘அங்க்கிள், மனுஷாள் கொசு, மூட்டைப் பூச்சிகளை விட அதிகமா இன விருத்தி பண்ணிட்டா. அதினால் இடம் போதாமல் காட்டை அழிச்சு ‘ப்ளாட்’ போட்டுட்டா. மிருகங்களுக்கு உலாத்தரதுக்கும், விளையாடறதுக்கும் இடம் போறலை. அதினால் இனிமேல் நாட்டுப் பக்கம் வர்ரதுன்னு முடிவு செஞ்சிட்டோம்.’’ என்றது.

கிறிஸ்தியான் யோசிச்சார். ‘‘அப்போ, ஒண்னு செய்யலாம். பீச், ஸ்டேடியம், நெடுஞ்சாலை, குறுஞ்சாலை, போன்ற இடங்களில் நீங்களும் உலாவுறதுக்கு ஒரு சட்டம் போடணும். காட்டிலே உங்களுக்கு சரியான ஆகாரம் கிடைக்காட்டி, நாட்டிலேயுள்ள வெஜ், நான்வெஜ் ஹோட்டல், இறைச்சிக் கடை, மீன் கடை போன்றவற்றில் எடுத்துச் சாப்பிட அனுமதிக்கணும். இதுக்கு ஒரு சட்டம் கொண்டு வரணும். மழைகாலத்திலே, அரசுபள்ளிக் கூடங்களிலே தங்குவதற்கு அனுமதிக்கணும். சுனாமி, புயல், கடும்மழை போன்ற

நாட்களில் உங்களுக்கும் அரசு உதவித்தொகை வழங்கணும். இதுக்கு ஒரு தீர்மானம் போடணும்'' என்று கிடுகிடுவென ஆவேசமாப் பேசினார்.

கொஞ்சநேர அமைதிக்குப் பின்பு'', இந்த மாதிரிப் பேசினா அரசியல்வாதிக்கும் கைதட்டுவா, பிரசங்கியாருக்கும் கைதட்டுவா, நீங்க கைதட்டவே இல்லையே! ஏன்? ஏன்? ஏன்?'' என்று ஆவேசமாய்க் கேட்டார்.

டிரக ஓடிப்போய் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தது. ''குடிங்கோ, கொஞ்சம் 'கூல்' ஆகுங்கோ, உங்களை எதிலே சேர்க்கிறது என்று யோசிச்சிண்டிருக்கோம்'' என்றது.

''இதிலே யோசிக்கிறதுக்கு என்ன இருக்கு, அரசியல்வாதியாய் இருக்க எனக்கு ஆசை இல்லை, நான் ஆன்மீகவாதி, அதிலே சேர்த்துட்டு, இப்போ கால் தட்டுங்கோ'' என்றார்.

புலி அவரை லேசாகப் பிராண்டி, ''இரண்டும் ஒண்ணுதானே?'' என்றது. கிறிஸ்தியான் வாயை மூடிண்டு சும்மா இருக்கக் கூடாதோ? கெட்ட நேரம். ''எப்படி?'' ன்னு கேட்டுட்டார்.

எல்லா மிருகங்களும் பேபிமானைப் பார்த்தன. குறிப்பறிந்த பேபிமான், ''அங்க்கிள், அரசியல்வாதி பணம் பண்றான், அனேக வாக்குத்தத்தங்களை அள்ளி வீசறான், தன் இன மக்களுக்கே உதவி செய்றான், தன் கட்சி நிலைத்திருக்கணும்னு மேடையிலே நன்னா நடிக்கிறான், எப்பவாவது ஒருமுறை ஏழைகளோடு உறவாடி, அக்காட்சியைப் படம் பிடித்து விளம்பரப்படுத்துறான், கள்ளக் கணக்கு எழுதறான், இலஞ்சம் வாங்குறான், மனசிலே வெறுப்பிருந்தாலும் வெளியிலே புன்சிரிப்புடன் காணப்படுகிறான், மனசிலே கசப்பை வைத்துக் கொண்டு இனிக்க இனிக்கப் பேசறான், உள்ளத்திலே கோபம் பற்றி யெறிந்தாலும் வெளியே மிகவும் சாந்தமுள்ளவன் போலக் காட்டிக்கிறான். அது போலதானே ஆன்மீகனும் இருக்கிறான்.

சரியா அங்க்கிள், அல்லது இதையெல்லாம் இன்னும் விபரமா விளக்கிச் சொல்லவா?'' என்று கேட்டது. ''உங்களுக்கு உதவி செய்ய வந்திருக்கேன். நீங்கள் என்னை இப்படிக் குத்திக் காட்டக் கூடாது'' என்று கிறிஸ்தியான் சொன்னார். சொன்னதுமன்றி, ''இப்போ, நாங்க உங்களுக்கு என்ன செய்யணும்? அதைச் சொல்லுங்க'' என்றார்.

''மனுஷன் காட்டுக்குள்ளே இடம் தேடுகிற மாதிரி நாங்க நாட்டுக்குள்ளே இடம் தேடி குடியிருக்க உதவணும், இதைச் செய்தால் போதும்'' என்றது டிரக.

கிறிஸ்தியான் யோசிச்சார். முதல் யோசனையே சரியாய் வரவில்லை, இப்போது இரண்டாம் யோசனைக்கு வந்திட்டார். இது எப்படி ஆகுமோ என்று அக்னி வாசகர்கள் சிந்திப்பது நேக்கு நன்னா விளங்கறது. கிறிஸ்தியானுக்கு விளங்கலையே! என்ன பண்றது!

''இதோ பாருங்க, உதவி செய்யறதிலே கிறிஸ்தியான்கள் தான் முதல், இது வினோபா ஜி அவர்களின் கருத்து. சுனாமி நேரத்திலே கூட அரசு செய்த உதிவிகளைக் காட்டிலும் கிறிஸ்தவா செய்த உதவிகள் தான் ஏராளம். சுனாமியை வைத்து அரசியல்காரர் இலாபம் அடைந்தது போல, கிறிஸ்தவ தலைவர்களும் இலாபம் அடைந்ததும் மெய்யே. அவா இதையெல்லாம் வெளியே காண்பிச்சுக்க மாட்டாததுபோல இவாளும் காண்பிச்சுக்க மாட்டா. உங்களுக்கு நான் உதவி செய்யறேன். ஆனால் அதுக்கு முன்னாடி நீங்க எனக்கு ஒரு உதவி செய்யணும்'' என்று சொல்லி ஏக்கத்தோடு எல்லா மிருகங்களின் முகத்தையும் பார்த்தார்.

''என்ன உதவி செய்யணும்'' என்று ஒரே மனதுடன் ஏகக் குரலில் எல்லா மிருகங்களும் கேட்டன.

கிறிஸ்தியான் சொன்னார் : ''நான் ஜெயிக்கணும், ஜெயிச்சாகணும்'' என்றார். எல்லா மிருகங்களும் திகைத்தன. டிரக அவரைப் பார்த்து : ''அரசியல்வாதிகள் தானே அப்படிச் சொல்லுவா?'' என்றது.

யானை அந்நேரம் அங்கே வந்து : ''எதிலே

ஜெயிக்கணும், பாபத்தை ஜெயிக்கணுமா, லோகத்தை ஜெயிக்கணுமா, மாம்ச இச்சைகளை ஜெயிக்கணுமா?'' என்று கேட்டது.

கிறிஸ்தியான் மெல்லிய குரலில் இரகசியம் சொல்வது போலச் சொன்னார் : ''எலக்ஷன்லே ஜெயிக்கணும், சபை எலக்ஷன் வருது'' என்றார்.

''சபை எலக்ஷன்லே ஜெயிக்கறதுக்கும் எங்களுக்கு உதவறதுக்கும் என்ன தொடர்பு?'' என்று புலி கேட்டது.

கிறிஸ்தியான் யோசிச்சார். இது அவரோட மூன்றாவது யோசனை. கொஞ்ச நேரம் அமைதலாக இருந்தார். பின்பு, : இதோ பாருங்க, நான் சபை எலக்ஷன்லே ஜெயிச்சு, சபை செயலராக வரணும், அப்போதான் கமிற்றி தீர்மானம் போட்டு, கிறிஸ்தவா இருக்கிற இடங்கள்ளே உங்களை ஃரியா உலாவ விடுவோம். ஆனா நீங்க எங்களைக் கடிக்கக் கூடாது'' என்றார்.

''எங்களுக்கு அப்படிப்பட்ட இடம் வேண்டாம்'' என்று எல்லா மிருகங்களும் சொல்லின.

''ஏன்?'' கிறிஸ்தியான்.

அதற்குப் புலி : கொடுமைக் கிறிஸ்தவா வாழும் நாட்டை விடக் கடும்புலி வாழும் காடு நன்றே'' என்று புலி சொல்லித்து.

''நாங்க வாழ்றதுக்கு ஐடியா கேட்டா, இவர் தலைவராகிறதற்கு ஐடியா பண்றார்'' என்றது தாய் மான்.

''இப்படிப்பட்ட சுயநலவாதிகளை கடிச்சுக் குதறணும், இல்லையாம்மா'' என்று பேபிமான் புலியை ஓரக்கண்ணால் பார்த்துண்டே தாயிடம் பேசிற்று. புலி தன் எல்லாப் பற்களையும் (ஆமா, புலிக்கு எத்தனை பற்கள்?) காட்டி உறுமிற்று, டிரக எழுந்து நின்றது. யானை தும்பிக்கையைத் தூக்கிற்று. கிறிஸ்தியான் அலறினார்.

“ஒண்ணும் செஞ்சுடாதிங்க, என்னை ஜெயிக்க வையுங்க, செயலராக்குங்க, உங்களுக்கு உதவி செய்வேன். செயலராக்குங்க” என்று சொல்லிக் கொண்டே விழுந்தார்.

“அடிப்படை உறுப்பினர் பதவிக்கே தகுதியில்லாதவங் கள்ளாம் செயலரானா உருப்பட்ட மாதிரிதான். இயேசுவே சபையைக் காப்பாத்துமையா” என்று சொன்ன பாரியாள் மற்ற அறைக்குள் போய் தாளிட்டுக் கொண்டாள்.

அல்லேலூயா!

# 2007-ம் ஆண்டின் இறுதிச் செய்தி

**I சாமுவேல் 7:1–6**

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி கீரியாத்யாரீமிலே அனேக நாட்கள் தங்கியிருந்தது. இஸ்ரவேல் குடும்பத்தாரெல்லாரும் கர்த்தரை நினைத்து, புலம்பிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சாமுவேல் தீர்க்கதரிசி இஸ்ரவேல் ஜனங்களை அந்நிய தேவர்களை சேவிப்பதை விட்டு, கர்த்தரிடத்தில் மனம் திரும்பும் படியாகச் சொன்னார். ஜனங்கள் மிஸ்பாவிலே கூடி, உபவாசம் பண்ணி, கர்த்தருக்கு விரோதமாய் பாபம் செய்தோம் என்று சொன்னார்கள்.

செய்த குற்றங்களுக்காக மனம் வருந்தித் திருத்திக் கொள்வது நல்லது. குற்றங்களை மறைத்து வாழ்வதை விட, குற்றங்களை அறிக்கை செய்து, அவைகளை விட்டு விலகி கர்த்தரிடத்தில் ஐக்கியப்படுவதே மெய் வாழ்க்கையாகும்.

கர்த்தர் இரக்கமும், கிருபையும், நீடியசாந்தமும் உள்ளவராயிருக்கிறார். இளைய குமாரன் தன்னைத் தானே உணர்ந்து, மனம்திருந்தி, தீர்மானித்து, அதைச் செயல்படுத்தும் படியாக எழுந்து தன் தகப்பனிடத்திற்குப் போனான். அதுவரை அந்த அன்புத் தகப்பன் வழியிலே விழி

வைத்தவனாக தன் வீட்டு வாசலிலே அமர்ந்திருந்தான். மன்னிப்புக் கேட்க வருகிறவன் நடந்து வந்தான். மன்னிக்கிற தகப்பன் ஓடி வந்தார்.

தன் தவறுகளை உணர்ந்து மனம்திருந்தி வருகிற ஒருவனுக்கு கர்த்தர் சொல்லுகிற வாக்குத்தத்தங்களைக் கவனியுங்கள்.

**முதலாவது**, கர்த்தர் அப்படிப்பட்டவர்களுடைய ஜெபத்திற்குப் பதில் அளிக்கிறார்.

“என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாபத்தை மன்னித்து, அவர்கள் தேசத்திற்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்” (2 நாளாகமம் 7:14; 30:9; நெகேமியா 1:9)

**இரண்டாவதாக** : “துன்மார்க்கன் தன் வழியையும் அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக் கடவன். அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார். (ஏசாயா 55:7; எரேமியா 3:12; 31:9)

**மூன்றாவதாக** : துன்மார்க்கன், தான் செய்த எல்லாப் பாபங்களையும் விட்டுத் திரும்பி, என் கட்டளைகளை யெல்லாம் கைக்கொண்டு, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் பிழைக்கவே பிழைப்பான், அவன் சாவதில்லை. (எசேக்கியல் 18:21; சகரியா 1:3)

**நான்காவதாக** : தங்கள் பாபங்களுக்காக மனம் வருந்தித் துயரப்படுகிறவர்களுக்கு அவர் ஆறுதல் தருகிறார் (மத்தேயு 5:4; 2 கொரிந்தியர் 1:4–6; லூக்கா 15:7)

**ஐந்தாவதாக** : பாபமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்போது, ஆண்டவர் அவர்களுக்கு பரிசுத்த ஆவியின் வரங்களைத் தருகிறார். (அப்போஸ்தலர் 2:38)

மேற்கண்ட வசனங்களைக் கவனமாகப் படித்து, உண்மையாக ஒப்புக் கொடுத்து, பழைய வருஷத்திற்கும் பழைய பாபங்களுக்கும் உங்களை நீங்கலாக்கி, சீர்ப்படுத்தி கொண்டு, விடுதலையுடன் புதிய ஆண்டுக்குள் பிரவேசிப்பீர்களாக. ஆமென்.

2007 ஆம் ஆண்டு முடிந்தது

*இந்த அக்னி 2007 டிசம்பர் 2008 ஜனவரி மாதத்திற்காக சேர்த்து அனுப்பப்படுகிறது. இனி அடுத்த அக்னி 2008 பிப்ருவரி மாதம் கிடைக்கும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம். நன்றி. (ஆ-ர்)*

## 2008ம் ஆண்டின் வாக்குத்தத்த செய்தி

நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ கண்ணீர் விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக் கொள் - உன் கிரியைக்குப் பலன் உண்டு என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரேமியா 31:16)

கடந்த ஆண்டில் எத்தனையோ விதமான போராட்டங்கள், பற்றாக்குறைகள், பிரச்சினைகள், சரீர வருத்தங்கள், நிந்தை-அவமானங்கள், கடன்தொல்லைகள் போன்ற இன்னும் அநேகக் காரியங்களினால் மனம் துவண்டு, நொந்து நூலாகிப் போயிருப்பீர்கள்.

அழுது அழுது தலையணையையும் பாயையும் நனைத்திருப்பீர்கள். தேவன் என்னைக் கைவிட்டு விட்டாரோ என்று புலம்பியிருப்பீர்கள். இன்னும் திருமணம் ஆகவில்லையே என்று ஏங்கியிருப்பீர்கள். கடன் தொல்லை என்னை கலங்கடித்து விட்டதே என்று அங்கலாய்த்திருப்பீர்கள் சரியான வேலை, வருமானம் இன்றித் தவித்திருப்பீர்கள். அனாவசியமாக என்மீது பழி சுமத்துகிறார்களே என்று பெருமூச்சு விட்டிருப்பீர்கள், வாய்விட்டு அழுதிருப்பீர்கள்.

கவலைப்படாதிருங்கள். இந்த ஆண்டு உங்களுக்கு ஆசீர்வாதமான ஆண்டாக இருக்கும். நீங்கள் அழாதபடிக்கு உங்கள் சத்தத்தை அடக்கி, நீங்கள் கண்ணீர் விடாதபடிக்கு உங்கள் கண்களைக் காத்துக் கொள்ளுங்கள். நீங்கள் தேவனுக்கென்று செய்த கிரியைகளுக்குப் பலன் உண்டு.

உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே!

நீங்கள் அசதியாய் இராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து, உங்களுக்கு நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவுபரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்க வேண்டும்.

வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினால் பெற்றுக் கொள்ள பழகிக் கொள்ள வேண்டும். சில நேரங்களில் உடனே வாய்க்கும். சில நேரங்களில் தாமதமாகலாம். அந்தரப்படக்கூடாது. பொறுமையுடன் காத்திருக்க வேண்டும்.

பதினேழு வயதில் சொப்பனங் கண்ட யோசேப்பு அது நிறைவேற பதின்மூன்று ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதாயிற்று. ஏழு நாட்களில் சென்றடையக் கூடிய கானானுக்குள் போக நாற்பது ஆண்டுகள் சுற்றியலைய வேண்டியதாயிற்று.

அன்னாள், ரெபெக்காள், எலிசபெத், மரியாள் ஆகியோருக்கு உடனே பிள்ளை பிறக்க வில்லை. பத்துமாதங்கள் கழித்தே பிறந்தன. எழுபத்து ஐந்தாம் வயதில் வாக்குத்தத்தம் பெற்ற ஆபிரகாமுக்கு நூறாவது வயதில்

பிள்ளை பிறந்தது. இவர்களெல்லாம் வாக்குத்தத்தங்களை நம்பி அணைத்துக் கொண்டவர்கள்.

உங்கள் அழுகையின் சத்தங்களும் சிந்தும் கண்ணீரும் இந்த ஆண்டில் முற்றிலும் மாற்றப்படும். கர்த்தருடைய வசனங்களையும் வாக்குத்தத்தங்களையும் விசுவாசத்துடன் ஏற்றுக் கொண்டு இந்த ஆண்டினை ஆரம்பியுங்கள்.

### விசுவாசிக்க வேண்டிய வாக்குத்தத்தங்கள்

‘‘கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து, தமது ஜனத்தின் நிந்தையை பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கி விடுவார். கர்த்தரே இதைச் சொன்னார் [ஏசாயா 25:8]

‘‘சஞ்சலமும், தவிப்பும் ஓடிப்போகும் [ஏசாயா 35:10] ‘‘கர்த்தரே உனக்கு நித்ய வெளிச்சமாயிருப்பார்; உன் துக்க நாட்கள் முடிந்து போகும் [ஏசாயா 60:20]

‘‘அழுகையின் சத்தமும் கூக்குரலின் சத்தமும் இனி கேட்கப்படுவதில்லை’’ [ஏசாயா 65:19]

‘‘அவர்கள் இனித் தொய்ந்து போவதில்லை’’ [ஏரேமியா 31:12]

‘‘தேவன் தாமே உங்கள் கண்ணீர் யாவையும் துடைப்பார்’’ (வெளிப்படுத்தல் 7:17)

‘‘தேவன் அவர்கள் கண்ணீர் யாவையும் துடைப்பார்; இனி மரணமும் இல்லை, துக்கமும் இல்லை, அலறுதலும் இல்லை, வருத்தமும் இல்லை, முந்தினவைகள் ஒழிந்து போயின’’ [வெளிப்படுத்தல் 21:4]

இப்புதிய ஆண்டு உங்களுக்கு ஆசீர்வாதமாயும் மகிழ்ச்சியாயும் இருப்பதாக. ஆமென்

### 2008 ம் ஆண்டு விடிந்தது.

# 2008

# பணம் பணம் பணம் பணம்

பணம் இல்லையேல் பிணம் – பணத்தைக் கண்டால் பிணமும் வாயைத் திறக்கும். பணமே உயிரின் ஜீவநாடி. பணத்தாசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. பணம் வந்தால் பற்றும் பறந்து போகும். பணமோ எல்லாவற்றிற்கும் உதவும் – இவைகள் யாவும் பணத்தைக் குறித்த பொன்மொழிகள். சில பைபிளில் உள்ளவை. மற்றவை வழக்கச் சொல்லில் உள்ளவை.

வாழ்விற்குப் பணம் தேவை. ஓரளவிற்கு மேல் சேர்ந்துவிட்டால் ஒரு பெரிய செலவு வந்தே தீரும். அது பொதுவாக வியாதியாக இருக்கும். அல்லது தீய பழக்க வழக்கங்கள் பற்றிக் கொள்ளும்.

அந்தக் காலத்தில் வங்கியில் பணம் கடன் கேட்டால் தகுதிச் சான்றெல்லாம் கேட்டு அலைய விடுவார்கள். வங்கியில் OD எடுப்பது என்பது பெரும் பணக்காரர்களுக்கே தகுதியாயிருந்து வந்தது.

ஆனால் இப்போது, வங்கியிலிருந்து எப்படியோ நமது தொலைபேசி எண்ணைக் கண்டு பிடித்து தேனிலும் இனிய குரலில் உங்களுக்கு பெர்சனல் லோன் வேணுமா சார், பழைய கார் லோன் வேணுமா சார், மாதாமாதம் முழு அளவு கூட கட்ட வேண்டாம், உங்களால் முடிந்த அளவு கட்டினால் போதும் என்றெல்லாம் குழைகிறார்கள்.

இதுவுமின்றி, இப்போது கடன் அட்டை (கிரெடிட் கார்டு) தருகிறார்கள். ஓட்டலில் சாப்பிடலாம், பெரிய பெரிய கடைகளுக்குப் போகலாம். கையில் கத்தை கத்தையாகப் பணம் வைத்துக் கொள்ள வேண்டாம். நான்கு ஐந்து கிரடிட் கார்டு வைத்திருப்பவர்கள் தங்களைக் கோடீஸ்வரன்களாக நினைத்துக் கொள்கிறார்கள். உண்மையில் இவர்கள் பெருங்கடன் காரர்கள் என்பதை மறந்து விடுகிறார்கள்.

ஒன்று தெரியுமா? உங்களுக்கு கிரடிட்கார்டு தருவதின் மூலம் அந்தக் குறிப்பிட்ட வங்கிகளுக்கு ஆண்டு தோறும் 36% வருமானம் கிடைக்கிறது.

ஒவ்வொரு வங்கியும் 20ல் ஆரம்பித்து 30 நாட்கள் வரை அனுமதி தந்துவிட்டு, பின்பு மாதத்தின் முதல் வாரத்திற்குள் கட்டிவிடுங்களேன் என்று கட்டளை போடுவார்கள். எந்த நாளில் பொருள் வாங்கினீர்களோ, அப்பொழுதிருந்தே உங்களுடைய கணக்கும் ஆரம்பமாகிவிடும். அதற்கடுத்த இறுதி நாளில் ஸ்டேட்மெண்ட் பில், தொகை செலுத்த வேண்டிய கால கட்டம் என்று எல்லாமே உங்கள் கைகளில்தான்.

சில கடைகளில் கிரடிட் கார்டுகளுக்கென தனியாக சேவை வரியையும் (சர்வீஸ் டாக்ஸ்) வசூலித்து விடுவார்கள். பொதுவாக நகைக் கடைகளில் உங்கள் கார்டை உரசும் பொழுதெல்லாம் உங்கள் பக்கம் இரண்டு சதவீதமாவது பணம் வீணாக்குகிறீர்கள் என்று பொருள்.

இன்னும் சில வங்கிகளிலிருந்து பொதுவாக பெண் குரல் தேனாக இனிக்கும்படி, “சார் இந்தமாதம் நீங்கள் ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டும். ஆனால் முழுத் தொகையும் கட்ட வேண்டுமென்று அர்த்தமில்லை. முந்நூறு ரூபாய் கட்டினால் போதும். அடுத்தமாதம் சேர்த்துக் கட்டலாமே என்பார்கள். ஆனால் பாக்கி எழுநூறு ரூபாய்க்கு விஷம் மாதிரி வட்டி ஏறும். அதற்கடுத்த மாதம் நீங்கள் 1700 கட்ட வேண்டும். ஆனால் மறுபடியும் தேன் ஒழுகும். இந்தமாதமும் முந்நூறு கட்டினால் போதும் சார் என்கும். நாம் இதை இலேசாக எடுத்துக் கொள்வோம். பரவாயில்லையே! வங்கியில் இவ்வளவு சலுகையா என்று நினைப்போம். இப்போது வட்டி குட்டி போடும். குட்டி வளர்ந்து, திருமணமாகி இன்னும் குட்டி போடும். முடிவில் நீங்கள் தலையில் துண்டைப் போட நேரிடும்.

கடன் வாங்கி சௌகரியம் தேடுவதை விட, கடன் வாங்காமல் போதும் என்ற மனதுடன் கூடிய வாழ்வே நல்லது. வேதாகமம் இதைப் போதிக்கிறது.

செழிப்பு உபதேசம் அனேகரை முக்கியமாக சில ஊழியர்களைச் சீரழிக்க வைத்துள்ளது. கிரடிட் கார்டு இன்றி இன்றைய உலகில் வாழ்வது சிரமம் என்று நீங்கள் நினைத்தால் கண்டகண்ட வங்கிகளில் தரும் உத்தரவாதங்களை நம்பி கிரடிட் கார்டு அல்லது ATM கார்டுகளைப் பெறவேண்டாம். நண்பர்கள், உறவினர்களைக் கலந்து ஆலோசிப்பது நலம்.

பணம் செலுத்த நீண்ட கால அவகாசங்களைத் தரும் வங்கிகளைத் தேர்வு செய்வது நலம்.

நெருக்கடி நேரங்கள் தவிர மற்ற நேரங்களில் அனாவசியமாகப் பணம் எடுத்து 'பர்சில்' வைத்துக் கொள்ளாமலிருப்பது நலம். குறிப்பிட்ட நாளுக்கு முன்பே கடன் தொகையை முழுவதும் செலுத்துவது நலம்.

கிரடிட் கார்டு மூலம் பணம் செலுத்தும் கடைகளின் ரசீதுகளைப் பத்திரப் படுத்தி, வங்கியிலிருந்து வரும் மொத்த ரசீது வரும்போது இரண்டையும் சரிபார்ப்பது நலம்.

உணவு விடுதிகளில் பெருமையாக கிரடிட் கார்டுகளை தூக்கி வெய்ட்டரிடம் தரும்போது, தாமதமாக அவர்கள் திரும்பி வந்து தருவது ஆபத்தானது. இடைவெளி நேரத்தில் உங்கள் கிரடிட் கார்டு ஜெராக்ஸ் செய்யப்பட்டு ஆன்லைனில் உங்கள் பணம் கொள்ளை போகலாம். மற்றவர்கள் உங்கள் கிரடிட் கார்டைக் கையாளும் போது நீங்கள் பக்கத்தில் இருப்பது நலம்.

நண்பர்கள் உறவினர்களின் கும்பலோடு ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் போக வேண்டாம். ஏனெனில் அவர்கள் வாங்கும் விலை மதிப்புள்ள பொருட்களை நீங்களும் வாங்கி உங்கள் அந்தஸ்தை நிலை நாட்டிக் கொள்ள தூண்டப் படுவீர்கள்.

மொத்தத்தில் கிரடிட் கார்டு இல்லாமல் இருப்பது மிகமிக நல்லது. பின்பு உங்கள் விருப்பம். கர்த்தர் உங்களைக் காப்பாற்றுவாராக.

# 2008

# பெற்றார்களே பிள்ளைகளுக்கு சொத்து சேர்த்து வைக்க வேண்டும்
## (2 கொரிந்தியர் 12:14)

பெற்றார்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு பணம் சேர்த்து வைப்பது நல்லது. இதற்கு நல்ல ஒரு திட்டம் உள்ளது. அதற்கு முறையான முதலீட்டுத் திட்டம் என்று பெயர். (Systematic Investment Plan) இது மியூச்சுவல் பண்டின் ஒரு கிளை. இத்திட்டத்தில் மாதம் ஐநூறோ ஆயிரமோ அதற்கும் மேலோ சேர்த்து வைக்கலாம்.

நீங்கள் போடும் இப்பணத்தைக் கொண்டு மியூச்சுவல் பண்டின் யூனிட்டுகளை வாங்குவார்கள். உதாரணமாக 2008 ஜனவரியிலிருந்து மாதம் 1000 ரூபாய் போடுகிறதாக வைத்துக் கொள்ளுங்கள். ஒரு யூனிட்டின் விலை 20 ரூபாய் என்று வைத்துக் கொண்டால் உங்களுக்கு 50 யூனிட்டுகளை வாங்கித் தருவார்கள். அடுத்த மாதம் ஒரு யூனிட்டின் விலை 21 ரூபாய் என்றால் உங்கள் ஆயிரம் ரூபாயைக் கொண்டு 47 யூனிட்டுகளை வாங்கிக் கொடுப்பார்கள். மூன்றாம் மாதம் ஒரு யூனிட்டின் விலை 19 ரூபாய் என்றால் உங்களுக்கு 52 யூனிட்டுகளை வாங்கிக் கொடுப்பார்கள். இப்படி ஆண்டுமுழுவதும் உங்களுக்கு மாதம் மாதம் கொஞ்சம் குறைவாகவும் கூடுதலாகவும் அந்த 1000 ரூபாய்க்கு யூனிட்டுகள் கிடைத்துக் கொண்டேயிருக்கும். ஆண்டு முடிவில் உங்களுக்கு 400 யூனிட்டுகள் கிடைக்கிறதாக வைத்துக் கொள்வோம். அந்நிலையில் ஒரு யூனிட்டின் விலை 35 ரூபாய் எனில் உங்களுக்குக் கிடைப்பது 14000 ரூபாய். இப்படிப் பத்து ஆண்டுகள் முதலீடு செய்தால் நீங்கள் கொடுத்த ரூபாய்க்கு 1,40,000 ரூபாய் கிடைக்கும்.

நிச்சயமாக நடுத்தரக் குடும்பத்தினர் ஒரு மாதத்தில் 5 அல்லது 10 ஆயிரம் சேமிக்க இயலாது. ஆனால் 500 அல்லது 1000 சேர்க்க முடியும்.

ஒவ்வொரு மாதமும் நீங்கள் வங்கிக்குப் போய் பணம் கட்ட வேண்டிய தொந்தரவு இல்லை. நீங்கள் எழுதிக் கொடுப்பதின் பேரில் நேரடியாக உங்கள் வங்கிக் கணக்கிலிருந்து பணம் போய் விடும்.

முதலீடு செய்யும் பணம் எவ்வளவு வேகமாய் வளருகிறது என்பதை நீங்கள் அவ்வப்போது பார்க்கலாம். சரியான வளர்ச்சி இல்லையெனில் இத் திட்டத்தை நிறுத்திவிடலாம்.

பணம் தேவையான நேரம் கையிலிருக்கும் யூனிட்டுகளை விற்றுப் பணமாக்கி விடலாம்.

எனினும் கண்டகண்ட மியூச்சுவல் பண்ட் அலுவலகங்களில் பணம் போட்டு விடக் கூடாது. மியூச்சுவல் பண்ட் புரோக்கர்களைக் கேட்டால் அவர்களே நல்ல அலுவலகங்களை நமக்குக் காட்டுவார்கள்.

இது சிறு துளி பெருவெள்ளம் போன்றது. 2008ல் ஆண்டவர் ஆசீர்வாதங்களைக் கொட்டுவார் போன்ற தீர்க்க தரிசனங்களை கற்பனை செய்யாமல் முடிந்த அளவிற்கு 500 அல்லது 1000 முதலீடு செய்யுங்கள். பல்லைக் கடித்துக் கொண்டு, பங்காளர் போன்ற திட்டங்களை விட்டு இப்படிப்பட்ட திட்டங்களில் முதலீடு செய்தால் பத்து ஆண்டுகளில் 1000 ரூபாய்க்கு ஒரு இலட்சம் கிடைக்கும்.

S.I.P. என்ற இந்த திட்டம் ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களுக்கு வாழ்வளிக்கும் திட்டம். பெற்றாரே பிள்ளைகளுக்கு கொஞ்சமாவது சேர்த்து வையுங்கள்.

என் பிள்ளைகளுக்கு எதுவும் சேர்த்துவைக்க வில்லையே என்ற மனக்குறை எனக்கிருப்பதால் இதை எழுதுகிறேன். கர்த்தர் உங்களை வழி நடத்துவாராக.

# Agni (For Private Circulation Only)

## உள்ளே......

ஆசிரியர் கடிதம்,
உயிரடையுங்கள்
யூதா
வெளிப்படுத்தல்
கிறிஸ்தியான் எலக்ஷன்
வேண்டுகோள்
சிந்திப்பீர்
2007–ன் இறுதி செய்தி
2008–ன் விடுவுச் செய்தி

ஒலிநாடா, ஒளிநாடா, VCD, DVD, புத்தகங்கள் ஆகியவைகளுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

**சாது செல்லப்பா**
42/28, **First Cross Street,**
**Dr. Radha Krishnan Nagar, Chennai-600041**

சாது செல்லப்பா அவர்களின் மேற்கண்ட செய்தித் தொகுப்புகள் வேறு எங்கும் கிடைக்காது. அப்படிக் கிடைத்தால் அவை திருட்டுத்தனமாக செய்யப்படுபவை. ஆகையால் ஊழியத்திற்கு ஊன்று கோலாக இருக்கும் இப்பொருட்களை எங்களிடமே கேட்டு வாங்கிப் பயன் படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். நன்றி


Edited and Published by :

**SADHU CHELLAPPA**
42/28, First Cross Street,
Dr. Radhakrishnan Nagar, Chennai - 600 041.
✆ : 044 - 24527519

Printed at :
**KING PRINTING PRESS,**
193/30, K.K. Road, Ambattur, Chennai - 600 053.
Phone : 044 - 65174459, 32564924